# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (ஆடி-ஆவணி) ஆகஸ்ட் 2009 ஏர்-24, உழவு-8, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
கே.ஆர்.பி.மோகன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
28353214
Fax : 044-42663650

| | |
|---|---|
| தலைவர் | : கே.ஆர்.பி.மோகன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| | பி.சென்னியப்பன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன் |
| | கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| நன்கொடை பட்டியல் | - 2 |
| வானம் தொடலாம் வாங்க ! | - 3 |
| அழுகை | - 9 |
| விளையாட்டு விழா | - 13 |
| மீடியா | - 21 |
| கொங்கு திருமண மாலை | - 24 |
| மணமாலை | - 25 |
| வாழ்த்துகிறோம் | - 26 |
| POSH AREA KODAMBAKKAM POLLACHI HOUSE | - 27 |
| நலத்திட்டம் | - 28 |
| மணமகள் தேவை | - 29 |
| மணமகன் தேவை | - 31 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு - கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | ஊர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | | 27,63,430 |
| 664 | L.H | A.R.ரம்யா | | 1,000 |
| 665 | | N.கனகவேல் | | 1,000 |
| 666 | | M.புவனாசுந்தர் | | 1,000 |
| 667 | | லாவண்யா | ராசிபுரம் | 1,000 |
| 668 | L.H | கல்பனா | வெள்ளகோவில் | 1,000 |
| 669 | 0148 | மஞ்சுபார்கவி | நாமக்கல் | 1,000 |
| 670 | 773 | V.கோவிந்தசாமி | நாமக்கல் | 1,000 |
| 671 | 397 | S.பெரியசாமி | நாமக்கல் | 1,001 |
| 672 | 964 | Dr.R.நிர்மலா | நாமக்கல் | 1,000 |
| 673 | 423 | A.E.முருகன் | நாமக்கல் | 1,005 |
| 674 | | பிரியதர்ஷிணி | சேலம் | 1,000 |
| 675 | 812 | ரதிதேவி | முசிறி | 1,000 |
| 676 | | P.சுசிலா | ஈரோடு | 1,000 |
| 677 | 1687 | பவித்ரா | ஈரோடு | 1,000 |
| 678 | L.H | R.தமிழரசி | கரூர் | 1,000 |
| 679 | L.H | V.சக்திபிரதீபா | ஈரோடு | 1,000 |
| 680 | L.H. | P.ராதிகாதேவி | ஈரோடு | 1,000 |
| 681 | 725 | K.பழனிச்சாமி | | 1,000 |
| 682 | 504 | N.R.ரங்கசாமி | ஈரோடு | 5,005 |
| 683 | | G.வாசுகி | நாமக்கல் | 1,000 |
| 684 | 2775 | P.கார்த்திகேயன் | நாமக்கல் | 1,000 |
| 685 | 390 | P.சிதம்பரம் | | 1,000 |
| 686 | | கொங்கு என்.குழந்தசாமி | ஈரோடு | 11,000 |
| 687 | | P.சிவப்பிரகாசம் | | 1,000 |
| 688 | 409 | Dr.P.தமிழரசன் | நாமக்கல் | 1,000 |
| 689 | | A.பிரியங்கா | கோவை | 1,000 |
| 690 | | T.அனுசுயா | ஈரோடு | 1,000 |
| 691 | | S.இந்துஸ்ரீ | சேலம் | 1,000 |
| 692 | | C.A.அகஸ்தியா | காங்கேயம் | 1,000 |
| 693 | | P.வளர்மதி | ஈரோடு | 1,000 |
| | | மொத்தம் | | 28,08,441 |

# வானம் தொடலாம் வாங்க !

- சிந்தனை கவிஞர் கவிதாசன்

1. *மேடையில் பேச ஆர்வமாக இருக்கிறது ஆனால் மனதில் மிகவும் தயக்கமாக இருக்கிறது. என்ன செய்வது?*

தங்களுக்கு சிறந்த பேச்சாளராக வரவேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பார்கள், தவறு நேர்ந்து விடுமோ? என்ற எண்ணமும், மற்றவர்கள், கேலி செய்யக்கூடும் என்ற எண்ணமும்தான் ஒருவருடைய முயற்சிக்குத் தடையாக உள்ளன. எண்ணிப்பாருங்கள்! தவழ்ந்து பழகாமல் யாரும் நடந்து பழகவில்லை.

தங்கள் பள்ளியில் நடக்கும் விழாக்களில், வரவேற்புரை, நன்றியுரை என்றவிதத்தில் உங்கள் பேச்சைத் தொடங்குங்கள். முயற்சியும் பயிற்சியும் தொடர்ச்சியாக இருந்தால் சாதாரண மனிதனும் சாதனையாளன் ஆகலாம். மேலும் எனது 'வெற்றி மேடை' என்ற நூல் உங்கள் இலட்சியத்தை அடையத் துணை நிற்கும் என்று நம்புகிறேன். வாசியுங்கள்! வளருங்கள்.

2. *எதிர்காலத்தில் எந்தத் துறையை தேர்ந்தெடுத்தால் வாழ்க்கை பிரகாசமாக இருக்கும்? அதை எப்படித் தேர்ந்தெடுப்பது?*

இயற்கையாகவே ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு திறமை சிறப்பாக அமைந்து இருக்கும். ஆகவே உங்களுக்குள் இருக்கும் தனித்திறமை என்ன என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது என்றால், இதுவரையில் எந்தப்பாடத்தில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற்றுள்ளீர்கள்? அந்தப்பாடத்தைப் படிக்க ஆர்வமாக உளளது? எந்தப் பாடத்தைப் படிக்கும்போது உங்களுடைய மனதில் உற்சாகம் ஏற்படுகிறது? என்று யோசித்துப் பாருங்கள். உங்களுடைய தனித்திறமையும், ஆற்றலும் அந்தத் துறையில்தான் இருக்கின்றது.

பிறகு அந்தத்துறை சம்மந்தப்பட்ட படிப்பு அல்லது தொழிலைத் தேர்ந்தெடுத்து உங்களுடைய வாழ்வைச் சிறப்பாக அமைத்துக்கொள்ளுங்கள். ஆர்வமும் திறமையும் ஒரு மனிதனைச் சாதனையாளனாக்கும். வியர்வைப் பூக்களில் இருந்துதான் வெற்றித்தேன் கிடைக்கும்.

*3. மற்றவர்களுடன் சகஜமாகப் பேசி என்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தத் தயக்கமாக உள்ளது. இத் தடையைப் போக்க மேற்கொள்ளும் வழிமுறைகள் என்னென்ன?*

மற்றவர்களோடு பேசிப் பழகுவதற்குத் தடையாக இருப்பவைகளில் முதலாவது, தாழ்வு மனப்பான்மையாகும். “மற்றவர்களுக்குத்தான் எல்லாம் தெரியும், மற்றவர்களெல்லாம் அறிவாளிகள்,எனக்கு மட்டும்தான் ஒன்றும் தெரியாது” என நினைக்கும்போது தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது. அவ்வாறு எண்ணுவதை விட்டுவிட்டு, உங்களுக்கும் சில திறமைகள் இருக்கும், சில ஆற்றல்கள் இருக்கும், அவற்றை எண்ணி உணர்ந்து மகிழ்ச்சி கொள்ளுங்கள்.

“தவறு நேர்ந்து விடுமோ என அஞ்சுவதை விட முயற்சித்துப் பார்ப்போம், நல்லதே நடக்கும்’ என்ற மனநிலையோடு, மற்றவர்களை அணுகுங்கள். முதலில் உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடு மனம் விட்டுப்பேசிப்பழகுங்கள். பிறகு அறிமுகம் இல்லாதவர்களிடமும் பேசும்போது நம்பிக்கையும் ஆற்றலும் உங்களுக்குள் தானாகவே வளர்ந்துவரும்.

மேலும், அறிமுகமில்லாதவர்களிடம் பேசும்போது எச்சரிக்கையாகவும் கவனமாகவும் பேச வேண்டும். முயற்சி செய்யுங்கள் முடியும்.

*4. எவ்வளவு படித்தாலும் தேர்வில் எழுதும்போது மறந்து விடுகிறது. இதை எப்படி சரிசெய்வது?*

படித்தது நினைவில் நிற்க வேண்டும் என்றால் எதைப்படித்தாலும் அதைப்புரிந்துகொள்ளும் விதத்தில் படிக்கவேண்டும். புரிந்துகொண்டு படிக்கும் போது, படிக்கின்ற விஷயம் மனதில் படமாக ஓடுவதை உணரமுடியும். மனப்படம் உருவாக்கிப் படிக்க வேண்டும். அவ்வாறு படிக்கும்போது படித்த விஷயம் அப்படியே மனதில் பதிந்து விடுகின்றது.

மேலும் வினாக்களுக்கான விடைகளைப் படிக்கும்போது, அதில் வருகின்ற முக்கிய கருத்துக்களைச் சுருக்கி ஓரிரு வார்த்தைகளை உருவாக்கி அவற்றை அவ்வாறே மனதில் பதித்துக்கொள்ளலாம். பிறகு அந்த ஓரிரு வார்த்தைகள் நினைவுக்கு வந்தாலே போதும். அதனுள் இருக்கும் விடை முழுவதையும் உங்கள் நினைவிற்குக் கொண்டுவர முடியும்.

மேலும் அவ்வாறு படிக்கும்போது அதற்கென்று தனியாக ஒரு சிறிய கையடக்க நோட்டில் குறிப்புகளை எடுத்து அதை உங்களுடைய சட்டைப்பையில் எந்நேரமும் வைத்துக்கொண்டு அவ்வப்போது எடுத்து ஒருமுறை பார்த்துக்கொண்டால், உங்கள் நினைவாற்றல் பெருகும். முயற்சித்துப் பாருங்கள் முயற்சிகள் வெல்லும்! முயற்சியே முதல் வெற்றி !

*5. எவரையும் தவறாக நினைக்காதவர்கள் விரையில் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை நம்புகிறீர்களா?*

எல்லோரையும் நம்புவது தவறு. எவரையும் நம்பாமல் இருப்பது அதைவிடத்தவறு. ஆகவே எவருடனும் எச்சரிக்கை உணர்வுடன் பழகவேண்டும். அவ்வாறு ஒருவரை முழுமையாக நம்புவதற்கு முன்னர் அவ்வப்போது சிறுசிறு சோதனைகள் மூலமாக அவருடைய நம்பகத்தன்மையை உணரவேண்டும். மேலும், நண்பனும் ஒருநாள் எதிரியாகக் கூடும் என்ற எச்சரிக்கையுடனும், எதிரியும் ஒருநாள் நண்பன் ஆகக்கூடும் என்ற எதிர்ப்பார்பையும் நெஞ்சில் வைத்துக்கொண்டு பழகுங்கள். எல்லாம் நல்லபடியாக நடக்கும்.

*6. பள்ளி, கல்லூரிகளில் படிக்கும்போதே, பேச்சாற்றல், எழுத்தாற்றலை வளர்த்துக்கொள்ள என்ன செய்யவேண்டும்?*

ஒருவருடைய முன்னேற்றத்திற்குப் பேச்சாற்றல் மிகவும் இன்றியமையாதது. பேச்சாற்றல் என்பது மேடையில் பேசுவது என்று மட்டுமே எண்ணிவிடாதீர்கள். ஒருவருடைய உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை மற்றவர்களுக்கு முறையாகவும் சரியாகவும் தக்கசமயத்தில் வெளிப்படுத்துவதே பேச்சாற்றல்.

உங்களுடைய மனதில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் தோன்றலாம், ஆனால் அவ்வெண்ணங்களை மற்றவர்களுக்குச் சொல்லும் திறன் உங்களுக்கு இல்லை என்றால், அவ்வெண்ணங்களால் உங்களுக்கும் சமுதாயத்திற்கும் எவ்வித நன்மையும் இல்லை.

ஆகவே, நமது மனதில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஆற்றலை இளமைப்பருவம் முதற்கொண்டே வளர்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.

“பேசப் பேசதான் பேச்சுவரும். எழுத எழுததான் எழுத்துவரும்” என்பார்கள். ஆகவே உங்களுடைய எண்ணங்களை, உங்களுடைய பேச்சாற்றல் மூலமாகவும், எழுத்தாற்றல் மூலமாகவும் வெளிப்படுத்தும் திறனை வளர்த்துக்கொள்ளும் பயிற்சியை, படிக்கும்

பருவத்திலேயே வளர்த்துக்கொண்டு வாழ்வில் முன்னேறுங்கள்.

*7. ஒருவர் வெற்றி பெறுகிறார் என்றால் முதலில் நீங்கள் அவரைப்பற்றி என்ன நினைப்பீர்கள்? ஏன் அவ்வாறு நினைப்பீர்கள்?*

ஒருவர் வெற்றி பெறுகின்றார் என்றால் அவருடைய வெற்றிக்குப் பின்னால் அவருடைய உழைப்பும் முயற்சியும் இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

உளிபடாத கல் சிலையாவதில்லை
அதுபோல உழைப்பில்லாத கனவு நனவாவதில்லை

மற்றவர்களுடைய சிபாரிசின் மூலமும், தவறான வழியிலும் கிடைக்கின்ற முன்னேற்றங்களும் வெற்றிகளும் நிலைத்து நிற்பதுமில்லை, நிம்மதியைக் கொடுப்பதுமில்லை. ஆகவே ஒருவர் வெற்றி பெறுவதற்குக் கீழ்க்காணும் மூன்று நிலைகளைக் கடக்க வேண்டும் என்பது எனது கருத்து

அதாவது 1. அவமானம் / மனக்காயம், 2. எதிர்ப்புகள் / தடைகள், 3.ஏற்றுக்கொள்ளுதல் / பாராட்டுகள்.

முட்டாள்கள் முதல் நிலையிலேயே நின்று விடுகின்றார்கள். தோற்றுப்போகின்றவர்கள் இரண்டாவது நிலையிலேயே முடங்கி விடுகின்றார்கள். வெற்றியாளர்கள் மட்டும்தான் மூன்றாவது நிலைக்கு வந்து முன்னேற்றக் காற்றைச் சுவாசிக்கின்றார்கள்.

சிரமங்களைக் கடக்காமல் சிகரங்களைத் தொட முடியாது. அவமானங்களை எல்லாம் வெகுமானங்ளகாகக் கருதி உழைப்பவர்கள் மட்டுமே வெற்றி உயரத்திற்குச் செல்கிறார்கள் என்பது உலக அனுபவம் கற்றுத்தரும் பாடம்.

வியர்வையில் குளித்து வருகிறவர்களுக்கு மட்டுமே வெற்றி தேவதை நெற்றித் திலகமிடுகிறாள். உழைப்பைச் சுவாசமாக்கினால் முன்னேற்றம் உங்கள் முகவரியாகும்.

*8.சாதனைகள் புரிய அதிகாலையில் எழுந்து படிக்க வேண்டுமா?*

அதிகாலை நேரத்தில் மனம் தெளிவாகவும் அமைதியாகவும் இருக்கும். ஆகவே அப்பொழுது படிக்கும்பாடம் மனதில் அப்படியே பதிந்து விடும் என்பதால்தான் அதிகாலை நேரத்தில் எழுந்து படிப்பது மிகவும் நல்லது என்று சொல்கிறார்கள். ஒருவர் 7,8 மணி நேரம் தூங்கினால் போதும். அதற்கு அதிகமாகத் தூங்கும்போது சோம்பேறித்தனம்தான் ஏற்படும்.

மேலும் இந்த உலகில் வெற்றி பெற்றவர்களிடம் இயல்பாகவும் பொதுவாகவும் இருக்கும் ஒரு பழக்கம் என்னவென்றால் அதிகாலை 5 மணிக்கெல்லாம் எழுந்து தமது கடமைகளைச்செய்யத் தொடங்குவது. கொஞ்சம் எண்ணிப்பாருங்கள், படுக்கையில் இருந்து எழுவதிலேயே நம்மால் ஜெயிக்க முடியவில்லை என்றால் வாழ்க்கையில் எவ்வாறு ஜெயிக்கப்போகின்றோம்?

ஆகவே போர்வைக்குள் போராட்டம் நடத்துவதை விட்டுவிட்டு, அதிகாலையில் எழுந்து படிப்பதை உங்களுடைய பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். மதிப்பெண்களும் கூடும். மதிப்பும் உயரும்.

சுறுசுறுப்பு நெருப்பில் சோம்பலைச் சாம்பலாக்கு. வெற்றி உனக்கு விழா எடுக்கும். காலை விழிப்பும் கடின உழைப்பும் கஷ்டங்களைப் போக்கி, சோதனைகளச் சாதனைகளாக்கும் மாமருந்து.

*9. நல்ல கையெழுத்து மிகவும் அவசியமா?*

ஒவ்வொருவருக்கும் நல்ல கையெழுத்து வேண்டும் என்றாலும் அச்சடித்ததைப்போல எழுதவேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் நாம் எழுதுவது மற்றவர்கள் எளிதில் வாசித்துப் புரிந்து கொள்ளும்படியும் தெளிவாகவும் இருக்கவேண்டும்.

அப்பொழுதுதான் நீங்கள் எழுதும் பதிலுக்கு உரிய மதிப்பெண்கள் கிடைக்கும். ஆகவே, உங்களுடைய கையெழுத்தை ஆரம்ப நிலையில் படிக்கும்போதே நல்லபடியாக வளர்த்துக்கொள்வது மிகவும் அவசியம் பள்ளியில் கொடுக்கும் கையெழுத்துப் பயிற்சிகளை தவறாமலும் சிறப்பாகவும் செய்து வாருங்கள். நல்ல கையெழுத்து உங்களுக்கு நிச்சயம் வரும். பயிற்சியின் மூலம் திறமை வளரும், முயற்சியின் மூலம் வெற்றி மிளிரும்.

முயற்சி செய்து பாருங்கள். எதையும் சாதிக்க முடியும். மேலும் கையெழுத்தை மேம்படுத்துவதற்குகென்றே, பல பயிற்சி நிறுவனங்கள் உருவாகி உள்ளன. விடுமுறை நாட்களில் அவற்றில் சேர்ந்தும் சிறப்புப் பயிற்சிகளை எடுத்துக்கொள்ளலாம் என்றாலும் பள்ளியில் கொடுக்கும் பயிற்சிகளைச் சிறப்பாகச் செய்தாலே போதும், உங்கள் கையெழுத்தில் முன்னேற்றம் காணலாம்.

*10. 2020 இல் இந்தியா வல்லரசு ஆக வேண்டும். அதற்கு மாணவர்களாகிய எங்களின் பங்கு என்ன?*

கி.பி. 2020 ல் இந்தியா வளர்ந்த நாடாக, தன்னிறைவைப் பெற்ற நாடாக வரவேண்டும் என்பது தான் நமது இலட்சியம். அதற்கான செயல்திட்டத்தை நமது முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் APJ அப்துல்கலாம் அவர்கள் தனது நூலான “இந்தியா 2020’ ல் தெளிவாகக் கொடுத்துள்ளார்கள்.

நமது தேசம் நூறு சதவீதம் கல்வியறிவு பெற்ற நாடாக, ஊழல் இல்லாத நாடாக, எல்லோருக்கும் மருத்துவ வசதி கிடைக்கும் நாடாக, வறுமை, பசி வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவை இல்லாத நாடாக, தனிமனித வருமானமும் வாங்கும் திறனும் (Buying Power) அதிகம் கொண்ட நாடாக 2020 க்குள்ளாக வரவேண்டும். அதற்கு ஒவ்வொரு இந்தியரும் தனது பங்கைச்செலுத்தவேண்டும். அப்பொழுதுதான் நமது இலட்சியம் நிறைவேறும்.

குறிப்பாக இன்றைய மாணவர்கள்தான் 2020 ல் அமைச்சர்களாக, ஆட்சியாளர்களாக, பொறியாளர்களாக, மருத்துவர்களாக, ஆசிரியர்களாக, தொழில் முனைவோராக, எழுத்தாளராக, பத்திரிக்கையாளர்களாக, பல்வேறு பொறுப்புகளை வகிக்க உள்ளார்கள். ஆம்! இன்றைய மாணவர்களின் கையில்தான் நாளைய இந்தியா இருக்கின்றது.

ஆகவே, நாளைய இந்தியாவை வழி நடத்திடத் தேவையான, தலைமைப்பண்பு, தியாக உள்ளம், நேர்மை, சகிப்புத்தன்மை, மனித நேயம், தேசப்பற்று, முடிவெடுக்கும் திறன், திட்டமிடும் ஆற்றல் ஆகியவற்றை படிக்கும் காலத்திலேயே வளர்த்துக்கொள்ள வேண்டும். அத்தோடு, படிக்கும் காலத்தில் கவனம் சிதறாமல் படிப்பின் மீது மட்டுமே கவனம் செலுத்தி முன்னேற வேண்டும்.

படிக்கின்ற காலத்தில் நன்றாகப் படிக்கவில்லை என்றால் உங்களுடைய வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்ள முடியாது. ஆம் ! மற்றவர்களை வழிநடத்தவேண்டும் என்றால் முதலில் உங்களை நீங்களே தயார்படுத்திக் கொள்ளவேண்டும். ‘நான் முன்னேறினால் எனது தேசம் முன்னேறும் என்ற சிந்தனையோடு ஒவ்வொரு மாணவரும் படித்து முன்னேறும் போது நமது இந்தியா நிச்சயம் முன்னேறிவிடும்.

❖❖❖❖

# அழுகை

- தமிழறிஞர் பத்மஸ்ரீ பெ.தூரன்

பிறந்தவுடன் குழந்தை அழுகிறது. அதைக்கேட்டு அப்பொழுது அனைவருக்கும் மனத்தில் ஒரு திருப்தி ஏற்படுகிறது. 'குழந்தை சுகமாகப் பிறந்திருக்கிறது நன்றாக அழுகிறது' என்று சொல்லுகிறார்கள்.

பிறந்தவுடனே குழந்தை அழுவானேன்? அதற்கு என்ன காரணம்?

"தேவர்களோடு பழகிக்கொண்டிருந்துவிட்டு இப்பொழுது இந்த மண்ணுலகிற்கு வந்துவிட்டேனே என்று குழந்தை அழுகிறதாகச் சிலர் வியாக்கியானம் செய்வார்கள்.

குழந்தை பிறந்தவுடன் சுவாசிக்க ஆரம்பிக்கிறது. முதலில் உள்ளே இழுக்கிற மூச்சு வெளியில் வரும்போது சப்தம் உண்டாகிறது இதுவே குழந்தையின் முதல் அழுகையாகச் சொல்லப்படுகிறது. பிறந்ததும் குழந்தை சிரமமின்றி நன்கு சுவாசித்துக்கொண்டிருந்தால் எல்லோருக்கும் திருப்திதானே உண்டாகும்? அதனால்தான் முதல் அழுகையைப்பற்றி, குழந்தை நன்றாக அழுகிறது என்று அதன் ஆரோக்கியத்தின் அறிகுறியாகப் பேசுகிறோம்.

குழந்தை இந்த அழுகையையே தனது ஆரம்ப பாஷையாக உபயோகப்படுத்திக்கொள்கிறது. ஏதாவது ஒருவிதத் துன்ப உணர்ச்சி மேலிடும்போதெல்லாம் இம்மாதிரியே குரல்கொடுத்து அதைப் பிறருக்கு வெளிப்படுத்துகிறது.

அழுவதால் குழந்தை தனக்கு வேண்டியதை அடைகிறது. அதனால் மறுபடியும் ஏதாவது அவசியமான பொழுது குழந்தை அதேமாதிரி அழ ஆரம்பிக்கும்.

குழந்தைக்குப் பசி என்று வைத்துக்கொள்வோம். அதை எப்படித் தாய்க்குத் தெரிவிப்பது? குழந்தைக்கோ பேச்சு வராது, அதனால் அழுகிறது. அழுகைப் பாஷையால் அதற்கு வேண்டியதை அது பெற்றுக்கொள்கிறது.

குழந்தைக்கு உடம்பில் ஏதாவது ஒரு வலி; படுக்கை உறுத்துகிறது; அல்லது அதற்குக் குளிர் தாங்கமுடியவில்லை எல்லாவற்றையும் இந்த ஒரே பாஷையால்தான் தெரியப்படுத்துகிறது. அதனால் குழந்தை அழுகிறபோதெல்லாம் அதற்குப்பசி என்றோ வேதனை என்றோ கோபமென்றோ நினைத்துக்கொள்ளக்கூடாது, பயந்து அழுகிறது என்றும் தீர்மானிக்கலாகாது. அழுகையின் காரணத்தைக் கண்டுப்பிடித்துக்கொள்வது பூங்குழந்தை விஷயத்தில் அவ்வளவு எளிதல்ல.

மூன்று வாரங்கூட நிரம்பாத பச்சைக் குழந்தை அழுகிறது. "அடீ, குழந்தை அழுகிறதே, எடுத்துப்பால் கொடு" என்கிறாள் பாட்டி. அவளுக்கு எப்பொழுதும் குழந்தைக்கு உணவு கொடுத்து அதை வளர்ப்பதில் தான்நிறைவு.

பால் கொடுத்தாய்விட்டது; ஆனால் அழுகை நிற்கவில்லை. இன்னும் குழந்தை அழதுகொண்டே இருக்கிறது. "வயிறு வலிக்கிறதோ என்னவோ? கொஞ்சம் விளக்கெண்ணெய் தடவி வயிற்றை நீவலாமா?" என்கிறாள் ஒருத்தி.

"பயந்துகொண்டதோ என்னவோ? நேற்றுமுந்தின நாள் இடிஇடித்தபோது வீல் என்று கத்திவிட்டது; கொஞ்சம் விபூதி மந்திரித்து வரச்சொல்ல வேணும்."

இந்தக்குழந்தை எதற்கெடுத்தாலும் இப்படித்தான் அழுகிறது. ரொம்பக் கோபக்காரனாக இருக்கிறானம்மா!""

இந்தமாதிரி அதன் அழுகைக்குக் காரணம் கண்டுபிடிக்க முயல்கிறோம். ஆனால் உண்மையான காரணம் இதுதான் என்று நிச்சயமாகத்தெரிவதில்லை.

குழந்தைக்குப்பேசத் தெரிந்தால் அதன்மனத்தில் உள்ளதை நமக்குச் சுலபமாகப் புரியும்படிதானே சொல்லும்? அதற்கு இப்பொழுது அழுகைஒன்றுதான்பாஷை அந்தப்பாஷையிலேயே பல பல உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டியிருப்பதால் எதுவென்று தெரிந்து கொள்வது கடினமாகிறது. அதற்கு ஏதோ ஒரு வகையில் அதிருப்தி என்பது மட்டும் நமக்குத் திட்டமாகத் தெரிகிறது. சந்தோஷமும் திருப்தியும் இருந்தால் அழாது,. ஆனால் என்ன அதிருப்தி என்றுதான் தெரிவதில்லை. பசியா, உடம்பில் வலியா? கோபமா? பயமா? எது என்று கண்டுகொள்ள முடிவதில்லை. சிறுகுழந்தையை வளாக்கும்போது இம்மாதிரி சங்கடங்கள் நேருகின்றன.

பூங்குழந்தை எதனால் அழுகிறது என்பதை நிச்சயமாகக் கண்டுபிடிக்க ஏதாவது வழி உண்டா? இதைப்பற்றி நடந்த சோதனை ஒன்றைக் கவனிப்போம்.

ஷெர்மன் என்பவர் மூன்றுவாரங்கூட நிரம்பாத குழந்தைகளை வைத்துக்கொண்டு ஆராய்ச்சி ஒன்று நடத்தினார். பசி, வலி, பயம், கோபம் முதலிய உணர்ச்சிகள் அவற்றிற்கு உண்டாகச்செய்தார். சில குழந்தைகளுக்குப் பால் கொடுக்காமல் பட்டினி போட்டார்; சிலவற்றை ஊசியால் குத்தினார்; இன்னும் சிலவற்றை இரண்டு மூன்றடி உயரத்திலிருந்து விழச்செய்தார். சிலவற்றிற்கு கோபம் உண்டாகும்படி அவற்றின் கையையோ தலையையோ அழுத்திப் பிடித்துக்கொண்டார்.

இவற்றால் வருந்திய குழந்தைகளின் முசுக்சுளிப்பையும், உடல் நெளிப்பையும், இதர செயல்களையும் சினிமாப்படமாகப்பிடித்துப் பலபேர்களுக்குக் காண்பித்தார். படத்தைப் பார்த்துவிட்டு என்ன காரணத்தால் குழந்தை அப்படிச்செய்கிறது. என்று திட்டமாகச் சொல்ல முடிகிறதா என்று பார்க்கவேண்டும் என்பது தான் அவர் எண்ணம். ஆனால் பார்த்தவர்கள் இன்ன உணர்ச்சியால் தான் குழந்தை முகத்தைச் சுளித்துக்கொண்டிருக்கிறது என்று ஒரு முடிவாகச்சொல்ல இயலவில்லை. அவர்கள் முடிவுகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருந்தன. ஆதலால், முகக்குறிப்பு, உடம்பின் அசைவு இவற்றைக்கொண்டு உணர்ச்சியை அறிய முடியவில்லை என்று ஷெர்மன் அபிப்பிராயப்டுகிறார்.

அவரே மற்றொரு சோதனை நடத்தினார். இந்தத் தடவை அழுகையிலிருந்துஉணர்ச்சியைக் கண்டுபிடிக்க முடியுமா? என்று பரிசோதித்தார். சோதனையில் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்கும் படியாகப் பொறுக்கி எடுக்கப்பட்டவர்களின் குழந்தைகளை வளர்ப்பதில் அநுபவம் வாய்ந்த பெண்களும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் திரைமறைவில் இருந்தார்கள். அழுகைக்குரல் மட்டுமே அவர்களுக்குக் கேட்டது. பழையபடியே பசி பயம், வலி, கோபம் முதலிய உணர்ச்சிகள் உண்டாகுமாறு பாவம் அந்தப் பூங்குழந்தைகளை ஹிம்சை செய்தார் ஷெர்மன்.

முடிவு என்னவாயிற்று? ஒவ்வொருவரும் அழுகையின் காரணத்தைப்பற்றித் தம் முடிவைத் தனித்தனித் துண்டுக்காகிதத்தில் எழுதிக்கொடுத்தார்கள். அவர்கள் அபிப்பிராயங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டே இருந்தன.

இந்தச் சோதனையும் நல்ல பலன் அளிக்கவில்லை. இருந்தாலும் குழந்தையின் அழுகை, முகக்குறிப்பு இவற்றிலிருந்தும் அதன் காரணத்தைக்கண்டுபிடிக்க முடியும் என்று சிலர் கருதலாம். சில சமயங்களில் அது சாத்தியமாகவும் இருக்கும். இங்கே நாம் பேசுவதெல்லாம் இரண்டு மூன்று வாரங்களே ஆன குழந்தைகளைப் பற்றித்தான். இவைகளின் விஷயத்தில் அவ்வளவு திட்டமாகச் சொல்ல முடியாதென்பதே அறிய வேண்டிய உண்மை.

குழந்தையைப் பற்றிய ஆராய்ச்சியில் ஒரு விஷயத்தை நாம் எப்பொழுதும் மறந்துவிடக்கூடாது குழந்தை கேவலம் ஜடவஸ்து வல்ல. ஒவ்வொன்றும் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. அதனால் அதைப்பற்றிய சோதனையின் முடிவுக்கு மாறுபட்டதாகக் குறிப்பிட்ட ஒன்றினையின் முடிவுக்கு மாறுபட்டதாகக் குறிப்பிட்ட

ஒன்றிரண்டு குழந்தைகளிடம், செய்கையைத் காணலாகும். பொதுவான உண்மைகளைப் பற்றியே இங்கே பேசுகிறோம்.

குழந்தைக்கு ஒருமாதம் ஆன பிறகு அதன் அழுகையில் ஒவ்வோர் உணர்ச்சிக்கும் தகுந்தபடி வித்தியாசம் ஏற்பட ஆரம்பிக்கிறது என்றும், ஆறுமாதங்களுக்குப் பிறகு அதன் முகக்குறிப்பிலும், உடம்பின் அசைவுகளிலும் உணர்ச்சிக்குத் தக்கவாறு வேறுபாடுகள் நன்கு காண்கின்றனவென்றும் பியூலர், கெஸல் என்ற அறிஞர்கள் கூறுகிறார்கள். பய உணச்சியைக் காண்பிக்கும் அறிகுறிகள் மட்டும் முதல் மாதத்திற்குப்பிறகு தெளிவாகத்தெரிகின்றனவாம். அது தற்காப்பு உணர்ச்சியல்லவா?

குழந்தை வளர வளர, அதன்பேசும் திறமை அதிகரிக்கிறது. அப்பொழுது அது தன் உணர்ச்சியைத் தெரிவிக்க அழுவதை விட்டுவிட்டு வேறு வழிகளைக் கையாளவேண்டும். அழுவது தாழ்வென்று அது உணரவேண்டும். பெற்றோர்கள் இதற்குப் பெரிதும் உதவி செய்யலாம். சில குழந்தைகள் எதற்கொடுத்தாலும் அழஆரம்பிக்கும். ‘அழுதால்தான் காரியம் கைகூடுகிறது; பெற்றோர்கள் கவனிக்கிறார்கள்’ என்ற மனப்பான்மையை நாம் வளரவிடக்கூடாது. அழுகை பூங்குழந்தையின் பாஷை, குழந்தை பெரிதாக ஆக இது மாற வேண்டும்.

❖❖❖❖

## இன்றைய பெயர் என்ன?

கீழே குறிக்கப்பெற்றுள்ள பெயர்கள் கொங்கு நாட்டு ஊர்களின் பழம்பெயர்கள். அவற்றிற்கு இன்று வழங்கும் பெயரை உங்களால் யூகிக்க முடிகிறதா? முயன்று பாருங்கள். உங்கள் யூகம் சரியா என்று 15 ம் பக்கம் ஆம் பக்கம் பார்க்கலாம்.

**1.** சிங்கை, **2.**குண்றத்தூர், **3.** செங்குன்றூர், **4.**பராந்தகம் ஆன இராசராசபுரம் **5.**போர். **6.** நம்பிபேரூர், **7.** அறைக்கல் **8.**பெரும்பழனம் **9.** வெளியூர் **10.** வயிரூசி, **11.** பொழில்வாய்ச்சி, **12.** வாகை

(வினாவும் விடையும் - புலவர் செ.இராசு. ஈரோடு

❖❖❖❖❖

# மீடியா

இது தகவல் தொழில்நுட்ப உலகம். உலகின் எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் செய்திகளை அடுத்த கணத்தில் நம்முன்னே தத்ரூபமாக நிறுத்துகின்றன ஊடகங்கள். பத்திரிகைகள், டெலிவிஷன், ரேடியோ, அட்வர்டைஸிங், பப்ளிக் ரிலேஷன் உள்ளிட்ட துறைகள் அடங்கிய ஊடகத் தொழில் இன்று கொடிகட்டிப்பறந்து கொண்டு இருக்கிறது. ஆண்டுக்கு 35 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் பணம் புரளும் தொழில் இது.

- வளர்ந்துவரும் இத்துறையில் உருவாகிவரும் புதிய வேலை வாய்ப்புகள் காரணமாக, இத்துறை தொடர்பான பல்வேறு படிப்புகளைக் கற்றுத்தர ஏராளமான கல்வி நிறுவனங்கள் வந்துவிட்டன. மீடியா படிப்புகளின் பாப்புலாரிட்டி காரணமாக, தற்போது கலை, அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் முக்கிய தேர்வாக மீடியா படிப்புகள் உள்ளன.
- தற்போது இளநிலைப்பட்ட நிலையிலேயே சில கல்வி நிலையங்களில் இதழியல் தொடர்பான படிப்புகளைத் தொடங்கி, விட்டார்கள். எனவே பிளஸ் டு படித்த மாணவர்கள் இப்படிப்புகளில் சேரலாம்.
- விஷ்வல் கம்யூனிகேஷன் தொடர்பான படிப்புகளில் இதழியலை ஒரு பாடமாகக் கற்றுத்தருகிறார்கள். மீடியா ஆர்ட்ஸ் போன்ற இளநிலை பட்டநிலையில் புதிய இதழியல் பட்டப்படிப்புகள் வரத்தொடங்கிவிட்டன. சில குறிப்பிட்ட பட்டப்படிப்புகளில் இதழியலும் ஒரு துணைப்பாடமாகக் கற்றுத்தரப்படுகிறது.
- முதுநிலைப்பட்டநிலையில் இதழியல் படிப்புகள் உள்ளன. இது தவிர, டிப்ளமோ, முதுநிலை டிப்ளமோ நிலையிலும் படிப்புகள் உள்ளன. பொதுவான ஏதாவது பட்டம் பெற்றவர்கள் இப்படிப்புகளில் சேரலாம்.
- விளம்பர யுகமும், தனியார் தொலைக்காட்சிகளின் ராட்சச வளர்ச்சியும் விஷ்வல் கம்யூனிகேஷன் (விஸ்காம்) பாடத்தை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றிவிட்டன. விளம்பரதாரர்களின் தயாரிப்புகளை மக்களிடம் பிரபலப்படுத்த மக்கள் மனதில் பதிய வைக்கும் வகையில் படங்களுடன் கூடிய வாசகங்களை உருவாக்குதல், லோகோ மற்றும் டிரேட் மார்க் விளம்பரங்களை வடிவமைத்தல் போன்ற துறைகளில் வேலை வாய்ப்பு கிடைக்கும்.
- விளம்பரப் புகைப்பட நிபுணர், கிளையன்ட் சர்வீஸ் எக்ஸியூட்டிவ், லே அவுட் ஆர்ட்டிஸ்டு, காப்பி ரைட்டர், விஷூவலைஸர், ஆர்ட்டைரக்டர் என விளம்பர நிறுவனங்களில் பல்வேறு பணிகளில் முத்திரை பதிக்கலாம்.

- திறமை, முகவெட்டு, நடிப்பு, உழைப்பு இருந்தால் சின்னத் திரையிலும் காம்ப்ரியரிங் செய்து கலக்கலாம். அல்லது கிராஃபிக் டிஸைனராகப் பணி புரியலாம்.
- அச்சு ஊடகங்களின் வளர்ச்சியை விட தொலைக்காட்சி ஊடகம் மிகப்பெரிய வளர்ச்சியைப்பெற்று வருகிறது. எனவே, அச்சுக் கல்வி நிறுவனங்கள், தொலைக்காட்சி ஊடகத்துக்குத் தேவையான திறமையாளர்களை உருவாக்குவதிலும் தற்போது முக்கிய கவனம் செலுத்தி வருகின்றன. தவிர அதிக எண்ணிக்கையிலான எஃப்.எம். சேனல்களின் வருகையும், செல்போன்களில் நுழைந்த பண்மை வசதியும், வானொலியின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தியுள்ளன.
- இதேபோல வளர்ந்து வரும் மற்றொரு ஊடகம், நியூ மீடியா எனப்படும் இணைய இதழியில் துறை. டெலிவிஷன், வானொலி, இணைய இதழ்கள் ஆகிய மூன்றையும் சேர்த்து எலெக்ட்ரானிக் மீடியா என்று பொதுவாக வகைப்படுத்தியுள்ளனர். வீடியோ ஜாக்கி, ரேடியோ ஜாக்கி, டெலிவிஷன் ரிப்போர்ட்டிங் அண்ட், பிரசன்டேஷன், டெலிவிஷன் நியூஸ்ரீடிங், ஆங்க்கரிங், மீடியா தொடர்பான பல்வேறு குறுகிய காலப்படிப்புகள் உள்ளன. பெரும்பாலும் தனியார் கல்வி நிறுவனங்களே இதுபோன்ற குறுகிய காலப்படிப்புகளை அளிக்கின்றன.

**எங்கு படிக்கலாம் ?**

இதழியல் : இதழியல் கல்வி வழங்குவதில் புது டில்லியில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேஷன் முக்கியக் கல்வி நிறுவனமாகும். மத்தியத் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனம் இது.

- சென்னையில் உள்ள ஏஷியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிஸம் கல்விநிலையம் தெற்கு ஆசியாவிலேயே முக்கியக் கல்வி நிறுவனமாக உருவாகி வருகிறது.
- புனேயில் உள்ள சிம்பயாசிஸ் இன்ஸ்டியூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேஷன், மும்பையில் உள்ள சேவியர் இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்யூனிகேஷன், மலையாள மனோரமா ஸ்கூல் ஆஃப் கம்யூனிகேஷன் உள்ளிட்ட பல்வேறு முக்கியக் கல்வி நிறுவனங்களில் இதழியல் தொடர்பான படிப்புகளைப் படிக்கலாம்.
- சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி ஆகிய இடங்களில் எம்.ஏ. இதழியல் படிப்புகள் உள்ளன. இது தவிர இதழியலை கற்றுத்தர பல தனியார் கல்வி நிறுவனங்களும் இருக்கின்றன.
- விஸ்வகாம் படிப்பைப் பொறுத்தவரையில் சென்னை அரசு கவின்

கலைக்கல்லூரியில் கமர்ஷியல் ஆர்ட் டிப்ளமோ படிப்பாக இருந்தது. தற்போது பி.எஸ்.ஸி.விஷுவல்கம்யூனிகேஷன் டிஸைன் பட்டப்படிப்பாக மாறியுள்ளது.

. சென்னை லயோலா கல்லூரியைத் தொடர்ந்து தமிழகத்தின் பல கல்லூரிகளில் பி.எஸ்.ஸி. விஷ்வல் கம்யூனிகேஷன் படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

. பிற மாநிலங்களில் உள்ள சில கல்வி நிறுவனங்களில், மாஸ் கம்யூனிகேஷன் படிப்புகளிலேயே விஷ்வல் கம்யூனிகேஷனும் ஒரு முக்கியப் பாடமாக நடத்தப்பட்டு வருகிறது.

. நியூமீடியா சென்னையில் ஏஷியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிசம் கல்வி நிலையத்தில் நியூ மீடியா மற்றும் பிராட்காஸ்டிங் ஜர்னலிசத்தில் ஓராண்டு முதுநிலை டிப்ளமோ படிக்கலாம்.

. தில்லியில் உள்ள ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தில் இதழியல் படிப்புகளில் சேர கடும்போட்டி உள்ளது. தொலைக்காட்சி நிறுவனங்களில் வேலை பெறுவதை இலக்காகக்கொண்டு இங்கு பயிற்சி அளிக்கப்படுவதே இதற்கு முக்கியக்காரணம்.

. புனேயில் உள்ள ஃபிலிம் அண்ட் டெலிவிஷன் இன்ஸ்டியூட் ஆஃப் இந்தியா கல்வி நிறுவனத்தில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தயாரிப்பு தொடர்பான டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகள் உள்ளன.

. தில்லியில் உள்ள டி.வி. டுடே மீடியா இன்ஸ்டிட்யூட் டில் டெலிவிஷின் ரிப்போர்டிங் காப்பி ரைட்டிங், நியூஸ் புரொடக்ஷன் தொடர்பான படிப்புகள் உள்ளன.

. சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தில் எலெக்ட்ரானிக் மீடியாவில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு படிக்கலாம். மாஸ் கம்யூனிகேஷன் மற்றும் விஷுவல் கம்யூனிகேஷன் தொடர்பான படிப்புகளில் தொலைக்காட்சி ஊடகத்தில் பணி புரிவதற்கேற்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

❖❖❖❖❖

**இன்றைய பெயர்கள்**

| | | |
|---|---|---|
| 1. காங்கயம் | 2. சங்ககிரி | 3. திருச்செங்கோடு |
| 4. தாராபுரம் | 5. திருப்பூர் | 6. நம்பியூர் |
| 7. நாமக்கல் | 8. பெருமாநல்லூர் | 9. பேளூர் |
| 10. பைரோஜி | 11. பொள்ளாச்சி | 12. விசயமங்கலம் |

# கொங்கு திருமணமாலை

திருமணத்தகவல் மையம் சென்னை

மணமகள் தேவை

செங்கண்ணன் கூட்டம் வயது 30 படிப்பு B.E.,(IEE) வெளிநாட்டில் சாப்ட்வேர் துறையில் பணிபுரிகிறார். உடன் பிறப்பு 1 சகோதரர் 1 சகோதரி மணமானவர்கள் தாயுடன் சென்னையில் வசிக்கிறார்கள். உயரம் 173 சிகப்பு கிருத்திகை நட்சத்திரம் ரிஷப ராசி கடகலக்னம் செவ்வாய் இல்லை. பட்டபடிப்புப் படித்த தகுதியான பெண் தேவை.

தொடர்புக்கு :-

P.கோமதி சகோதரி, 9094042513

டி.கே.சுப்ரமணியன் Cell : 9840364348 - 044-22311411

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்

கரூர் மாவட்டம் புன்மை சத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. M.இராமலிங்கம் திருமதி R.இராஜாமணி தம்பதியரின் பெருங்குடிக் குலச்செல்வி R.அபிநயா, 2009 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்பு அரசுப்பொதுத் தேர்வில் கலந்துகொண்டு, 500க்கு 495 மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்று பெரும் சாதனை நிகழ்த்தியுள்ளார். இச்சாதனையைப்பாராட்டி தமிழக முதல்வர் பாராட்டுச்சான்றிதழையும் ரூ. 20000/- ரொக்கப்பரிசினையும் செல்வி அபிநயாவை நேரில் வரவழைத்து வழங்கியுள்ளார். உயர்கல்விச்செலவு முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்பதாக தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.



அரும் சாதனை நிகழ்த்திய செல்வி R.அபிநயா-வை கொங்கு சங்கம் பாராட்டி மகிழ்கிறது. மேன்மேலும் சாதனைகள் நிகழ்த்திட சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖


## மணமகன் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | B.திவ்யா |
| படிப்பு | : | B.Tech |
| வேலை | : | TCS ல் சாப்ட்வேர் என்ஜினியர் |
| பிறந்த தேதி | : | 08-08-1986 |
| நட்சத்திரம் | : | பூரம் |
| ராசி | : | சிம்மம் |
| தோவு விபரம் | : | பரிகார செவ்வாய், 7ல் உள்ளது. (அதற்கேற்ப வரன் தேவை) |
| குலம் | : | காடை |
| நிறம் | : | சிகப்பு |
| உயரம் | : | 171 cm |
| குடும்ப விரபம் | : | தகப்பனார் கோவையில் ஆடிட்டராக பிராக்டிஸ் செய்து வருகிறார். |
| உகந்த மணமகன் | : | நல்ல அந்தஸ்து உள்ள குடும்பத்திலிருந்து நன்கு படித்து வேலையிலோ அல்லது சுயதொழிலோ உள்ளவர். |
| விலாசம் | : | M.பாலசுப்பிரமணியன் B.Com., FCA, DISA, ஆடிட்டர்<br>219A, சத்தியமூர்த்தி ரோடு, ராம்நகர், கோவை - 641009<br>Ph : 98947 35929 |

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | M.ஓம்குமார் B.E., M.S., (USA) |
| பிறந்த தேதி நேரம் | : | 28-01-1976 புதன் இரவு 9.50 |
| லக்கினம் | : | கன்னி |
| ராசி | : | தனுசு |
| நட்சத்திரம் | : | பூராடம் 1ம் பாதம் |
| மூலம் | : | வெண்டுவன் குலம் |
| குலதெய்வம் | : | செல்லாண்டியம்மன் கருப்பணசாமி |
| கோவில் | : | ஆரியூர், கரூர், பரமத்தி |
| உடன்பிறந்தோர் | : | இல்லை |
| உயரம் | : | 175 செ.மீ. |
| பணியிடம் | : | California Sanfrancisco, USA Permanent Residence Card<br>(Green card U.S.A.) |
| வருமானம் | : | 1,30,000 Dollars p.a. (One Lakh thirty Dollers per Annum) |
| தகப்பனார் பெயர் | : | திரு A.மாரியப்பன் |
| தாயார் பெயர் | : | திருமதி. M.சரஸ்வதி |
| முகவரி | : | சுமத்திரா இல்லம், (தென்புறம்)<br>குறிஞ்சி நகர், வேடசந்தூர் - 624710 |
| தகவல் தொடர்புக்கு | : | 04551 - 262152, Cell : 94438 05935 |
| எதிர்ப்பார்க்கும் தகுதி | : | M.C.A. or Software Eng Or MBA or<br>M.Sc., Computer Science or MS |

## வாழ்த்துகிறோம்



நமது சங்கத்தின் ஆயுட் கால உறுப்பினரும், கோவை திருமதி மலர்கொடி பாலசுந்தரம், இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பாலசுந்தரம் ஆகியோரின் மகன் டாக்டர் நவீன் பாலசுந்தரம் சென்னை ஸ்டேன்லி மருத்துவக்கல்லூரியில் அறுவை சிகிச்சையில் தங்கப் பதக்கத்துடன் M.B.B.S. பட்டத்தை பெற்றபின் அமெரிக்கா சென்று, அங்கு நடத்தப்படும் USMLE தேர்வில் STEP I, II & III மூன்றிலும் 99 Percent பெற்று முதலாவது மாணவனாக தேர்வு செய்யப்பட்டு அமெரிக்காவின் OHIO மாநிலத்தில் உள்ள உலக புகழ்ப்பெற்ற Cleveland மருத்துவமனையில் அறுவைசிகிச்சை பட்ட மேற்படிப்புக்குச் சேர்ந்துள்ளார். டாக்டர் நவீன் 2001 ஆம் ஆண்டு +2 ல் 1176 மதிப்பெண்கள் பெற்று நமது சங்கத்தில் முதல் பரிசு வாங்கியவர். கொங்கு சமுதாயம் பெருமைப்படும் அருமை சாதனையை சங்கம் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறது.

❖❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்

நமது கொங்கு நண்பர்கள் சங்க மூத்த உறுப்பினர் திரு. A.விஸ்வநாதன் B.E., (உறுப்பினர் எண். 128) அவர்கள் சென்னை பெருநகர் குடிநீர் வாரியத் தலைமைப் பொறியாளராக (Chief Engineer - Chennai Metropolition Metro Water) பதவி உயர்வு பெற்றுள்ளார். என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். வெண்டுவன் குலத்தைச் சேர்ந்த இவரது சொந்த ஊர் பவானி அருகில் உள்ள நெடுங்குளம் கிராமம். இவருக்கு V.சாந்தி என்ற மனைவியும் திரு. V.ரஞ்சித் B.E.,(Now in USA) என்ற மகனும், செல்வி V.ஷமிதா B.E., என்ற மகளும் உள்ளனர். அன்னாருக்கும், அன்னார் குடும்பத்தாருக்கும் சங்கம் தனது இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவத்துக்கொள்கிறது.



❖❖❖❖❖❖

**POSH AREA KODAMBAKKAM POLLACHI HOUSE**

Single luxury fully aircondioned and furnished apartment for rent less than a week US $50 or Rs. 2300/- per day. Above one week less than a month US $ 45 or Rs. 2100/- per day. More than a month US $ 40 or Rs. 1800/- Car with driver arranged as extra charge 5% discount for kongu sonthaggal

**SIVA CHELLATHURAI (CA USA)**

E-mail : siva@clothingbay.com, Clothingbay@gmail.com

Phone : 949-613 7123

**PKM THURAI**

E-mail : thurai@amaravathi.com / Mobile : 98400 20310

❖❖❖❖❖

**COMMERCIAA SPACE**

# TOLET

Commercial Space ______________Sq.ft.
Available for Rent at

Gournd Floor,
# 115, Peters Road, Chennai - 600 014.

Suitable for office, and Show Room

Interested Parties Please contact Secretary Kongu Nanbargal Sangam for Details

**Tel. : 2835 12544, 2835 2744**
**Mobile : 9381545452**

❖❖❖❖❖❖

## தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம்

தமிழ்நாடு விவசாய தொழிலாளர் மற்றும் விவசாய நல வாரிய தலைவராக திரு. K.P.இராமலிங்கம் Ex. MP., அவர்கள் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள் விவசாயிகள் (சமூகப்பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் 22-12-2006 ஆம் ஆண்டு தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 74 லட்சத்து 95 ஆயிரத்து 644 குடும்பங்கள் உள்ளன.



சுமார் 1 கோடியே 70 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர். சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களைச்சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். இதுவார ரூ. 587 கோடி இந்த வாரியத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 5 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 2½ ஏக்கர் நன்செய் நிலம் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.

உறுப்பினர்களுக்கு பல்வேறு வகையான உதவித்தொகைகள் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. உறுப்பினராக விடுப்பவர் விபத்தில் இறந்தால் ரூ. 1,00,000 மும் மறைந்தகு ரூ. 10,000/- மும் வழங்கப்படும். 55 வயது நிரம்பிய முதியோருக்கு மாதம் ஓய்வூதியம் ரூ. 400/- வழங்கப்படும்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத்திட்டத்தின் சிறப்புகளை உணர்ந்து, இதில் உறுப்பினராக சேர்ந்து பயனையை வேண்டி நம்பகுதி ஏழை மக்களுக்கு அறிவுரை வழங்கிட சங்க உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. கே.பி.இராமலிங்கம் Ex. MP., அவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖❖